# காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் சர்வதேச கருத்தரங்கு



■ லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மைய ஆங்கில துறை சார்பில் துவங்கிய இரண்டு நாள் சர்வதேச மாநாட்டை மைய இயக்குநர் சசிகாந்த தாஸ் துவக்கி வைத்து பேசினார்.

**புதுச்சேரி, பிப். 24–**

புதுச்சேரி லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆங்கிலத் துறை சார்பில் சர்வதேச கருத்தரங்கு நேற்று துவங்கியது.

"உலகளாவிய தெற்கு அறிவியல், மானுடவியல், சமூக அறிவியல் மற்றும் கலைகளுக்கு இடையிலான உரையாடல்கள்" என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் சர்வதேச கருத்தரங்கு கல்லூரியில் நேற்று துவங்கியது.

விழாவை, புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு துவக்கி வைத்தார். காஞ்சி மாமுனிவர் அரசு நிறுவனத்தின் இயக்குனர் சசிகாந்த தாஷ் தலைமை தாங்கினார்.

பேராசிரியர்கள் கோச்சடை, குமரேசன், அழகையா, இளங்கோவன், புதுச்சேரி பல்கலைக்கழகம் பேராசிரியர் டென்சின் ஜாங்சப்கம்பா, ஹர்ஷ்மீனா ஜெர்மனி, ஹாம்பர்க் பல்கலைக்கழகம் ஒல்கா நோவிக்கா ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர்.

காஞ்சி மாமுனிவர் நிறுவனத்தின் பேராசிரியர் ரஜினி சேனாலியன், தெற்காசியாவின் உணவுத் தேர்வுகள், உணவு கலாச்சாரம் மற்றும் கலாச்சார, இலக்கிய மற்றும் அனுபவ ரீதியான ஒற்றுமைகள் குறித்தும், புதுச்சேரி போப் ஜான் பால் கல்வியியல் கல்லூரி பேராசிரியர் ஜீன் கிளாட், இலங்கை திறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாசந்திர மோகன், பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி பேராசிரியர் நோயலின் பியானா அருள்மேரி உட்பட பலர் பங்கேற்று பேசினர்.

கருத்தரங்கில் பல்வேறு பல்கலைக்கழகங்களை சேர்ந்த அறிஞர்கள் தங்களது ஆய்வுக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். கல்லூரியில் இரண்டாவது நாளாக இன்று (24ம் தேதி) கருத்தரங்கம் நடக்கிறது.

Thirumalar | 24/2/2c | page no – Add-3